டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்

agridoctor.in | 26.11.2024 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 132- Madurai | Online Edition

# டாக்டர் வர்கீஸ் குரியனை கௌரவிக்கும் வகையில் தேசிய பால் தினம்-2024 கொண்டாட்டங்கள்

புது தில்லி, நவ.25

மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் கீழ் உள்ள கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை, 2024, நவம்பர் 26 அன்று புதுதில்லியில் உள்ள மானெக்ஷா மையத்தில் 'தேசிய பால் தினத்தை' கொண்டாடுகிறது. 'இந்தியாவில் வெண்மைப் புரட்சியின் தந்தை' என்று அன்புடன் நினைவுகூரப்படும் டாக்டர் வர்கீஸ் குரியனின் 103வது பிறந்த நாளை இந்த நிகழ்வு கௌரவிக்கிறது.



இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கு பால்வளத் துறையின் முக்கிய பங்களிப்புகளை எடுத்துக்காட்டுகிறது. இந்த விழாவில் மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் என்கிற லாலன் சிங், இத்துறையின் இணையமைச்சர்கள் பேராசிரியர் எஸ்.பி.சிங் பாகேல், ஜார்ஜ் குரியன் மற்றும் பல பிரமுகர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில், நாடு முழுவதும் உள்ள உள்நாட்டு பசு / எருமை இனங்களை வளர்க்கும் சிறந்த பால் பண்ணை விவசாயி, சிறந்த செயற்கை கருவூட்டல் தொழில்நுட்ப வல்லுநர், சிறந்த பால் கூட்டுறவு சங்கம் / பால் உற்பத்தியாளர் நிறுவனம் / பால் உற்பத்தியாளர் அமைப்பு ஆகிய 3 பிரிவுகளில் கால்நடை மற்றும் பால்வளத் துறையில் மிக உயர்ந்த தேசிய விருதுகளில் ஒன்றான தேசிய கோபால் ரத்னா விருதுகளை மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் வழங்குவார். ஒவ்வொரு பிரிவிலும் புதிதாக சேர்க்கப்பட்ட சிறப்பு விருதுகள் வடகிழக்கு பிராந்தியத்தைச் சேர்ந்த வெற்றியாளர்களுக்காக வழங்கப்படும். இந்த நிகழ்வின் போது, விருது பெற்ற சிலர் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார்கள்.

இந்த நிகழ்வில் இரண்டு குறிப்பிடத்தக்க பிரசுரங்கள் வெளியிடப்படும். முதலாவது அடிப்படை கால்நடை வளர்ப்பு புள்ளி விவரம் -2023, இது கால்நடை மற்றும் பால்வளத்துறை போக்குகள் பற்றிய முக்கிய விவரங்களை வழங்கும். இரண்டாவது, பால் தரும் உயர்ரக கால்நடைகளை உள்ளடக்கிய ஒரு தேசிய கறவை மந்தையை உருவாக்க வழிகாட்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட உயர்ரக பசுக்களின் அடையாளம் குறித்த கையேடு.

பஜாஜ் ஆட்டோ நிறுவனத்துடன் இணைந்து முன்னணி பால் கூட்டுறவு நிறுவனமான அமுல் ஏற்பாடு செய்துள்ள அகில இந்திய மோட்டார் பேரணியின் நிறைவு இந்தக் கொண்டாட்டத்தின் சிறப்பம்சமாகும். முன்னதாக இந்தப் பேரணியை மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அமித்ஷா குஜராத்தின் சபர்கந்தா மாவட்டத்தில் உள்ள ஹிம்மத்நகரில் இருந்து 2024 நவம்பர் 19 அன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் பேரணிக் குழுக்கள் புதுதில்லியில் உள்ள தௌலா குவானில் கடைசி கட்டமாக ஒன்றுகூடி இறுதியாக மானெக்ஷா மையத்தை வந்தடைவார்கள். அங்கு அவர்களை மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் வரவேற்பார்.

இந்நிகழ்வில் சிந்தனையைத் தூண்டும் இரண்டு குழு விவாதங்களும் நடைபெறும். முதலாவது, 'பெண்கள் தலைமை யிலான கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை. 'இது கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறையில் பெண்களின் பங்களிப்பை குறித்து ஆய்வு செய்யும். அனைத்து பாலினத் தையும் உள்ளடக்குதல் மற்றும் அதிகாரமளித்தலையும் வலியுறுத்தும். 'உள்ளூர் கால்நடை ஆதரவு மூலம் விவசாயி களுக்கு அதிகாரம் அளித்தல்' என்ற கருப்பொருளில் இரண்டாவது குழு விவாதம் நடைபெறும்.




இது இந்தியாவின் கிராமப்புற பொருளாதாரத்தின் ஒரு முக்கிய அங்கமான உள்ளூர் கால்நடை ஆதரவு அமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான உத்திகளை ஆய்வு செய்யும்.

இந்த மாபெரும் நிகழ்வில் விவசாயிகளும், பால் கூட்டமைப்புகள், பால் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் நாடு முழுவதிலுமிருந்து பங்கேற்பார்கள். தேசிய பால் தினம் 2024 உலகளாவிய பால்வளத் துறையில் இந்தியாவின் தலைமையைக் கொண்டாடுவதாக இருக்கும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை சிறப்பு பயிற்சி துவக்க விழா

கள்ளக்குறிச்சி, நவ.25

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் காளசமுத்திரம் வேளாண்மை அறிவியல்




நிலையமும் (KVK) ஹைதராபாத்தில் உள்ள தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மை நிறுவனமும் (ICAR - NAARM) இணைந்து பட்டியலின விவசாயிகளுக்கான அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை பற்றிய சிறப்பு 5 நாள் பயிற்சி 25.11.24 முதல் 29.11.24 வரை நடத்துகிறது. இப்பயிற்சியின் துவக்கவிழா நிகழ்ச்சி 25.11.24 அன்று காளசமுத்திரம் வேளாண்மை அறிவியல் நிலை யத்தில் நடைபெற்றது. காளசமுத்திரம் வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மா. விமலாராணி, வரவேற்புரை வழங்கி விருந்தினர்களை கௌரவித்தார்.

மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த், இப்பயிற்சியை துவக்கி வைத்து இயற்கை வேளாண்மை கையேட்டை வெளியீட்டு பயனாளி களுக்கு இடுப்பொருட்கள் வழங்கி விழா பேரூரை வழங்கினார். தலைவாசல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் அ.இளங்கோ, பட்டியலின பயனாளி களுக்கு இடுப்பொருட்கள் வழங்கி இயற்கை வேளாண்மை முக்கியத்துவத்தை எடுத்துரைத்து தலையையுரை வழங்கினார்.

ஹைதராபாத் தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மை நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் ம.பால கிருஷ்ணன், பட்டியலின விவசாயிகளுக்கு இந்நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் பற்றி எடுத்துரைத்து சிறப்புரை வழங்கினார். கள்ளக்குறிச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சத்தியமூர்த்தி அங்கக வேளாண்மைக்கு வேளாண் துறையில் மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்து சிறப்புரை வழங்கினார். காளசமுத்திரம் வேளாண்மை அறிவியல் நிலைய இணைப்பேராசிரியர் முனைவர் பெ.முருகன், இப்பயிற்சியில் மேற்கொள்ளப்படும் பணிகள், முக்கியத்துவம், விவசாயிகள் பெறும் பயன்கள் பற்றி எடுத்துரைத்து நன்றியுரை வழங்கி இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

இப்பயிற்சியில் அங்கக வேளாண்மை, இயற்கை வேளாண்மை, திரவ வடிவ இயற்கை இடுப்பொருட்கள் தயாரிப்பு, இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகள், கால்நடைகளுக்கு மரபுசார் மூலிகை வைத்தியம் பற்றி விரிவுரைகள் வழங்கி, அருகில் உள்ள வேளாண் ஆராய்ச்சி நிலையங்களுக்கும், வெற்றி கண்ட விவசாயிகளின் வயல்களுக்கும் அழைத்துச் செல்லப்படுவார்கள். பயிற்சியின் முடிவில் விவசாயிகளுக்கு சான்றிதழ், இயற்கை வேளாண்மை கையேடு மற்றும் இடுப் பொருட்கள் வழங்கப்படும். பயிற்சியில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள 40 பட்டியலின விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 25.11.2024 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 25 | 30 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 25 | 30 | 57 | உருளை (பிற) | 30 | 38 |
| 1B | கத்திரி(Nadu) | 40 | 45 | 57A | உருளை(ஊட்டி) | 34 | 56 |
| 2 | வெண்டை | 45 | 50 | 58 | மேரக்காய் | 25 | 28 |
| 3 | தக்காளி (நாடு) | 25 | 28 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 40 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 20 | 24 | 60 | கேரட் | 70 | 75 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 60 | 66 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 70 |
| 6 | புடலை | 30 | 34 | 62 | நூல்கோல் | 45 | 48 |
| 7 | பீர்க்கன் | 40 | 44 | 63 | டர்னிப் | 45 | 48 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 25 | 32 |
| 9 | பாகற்காய் | 30 | 38 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 35 | 40 | 66 | காளிபிளவர் | 40 | 43 |
| 11 | பூசணி | 12 | 14 | 67 | பட்டாணி | 100 | 120 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 260 | 332 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 25 | 28 | 69 | இஞ்சி | 48 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 20 | 25 | 70 | புருக்கோலின் | 170 | 180 |
| 15 | சி.வெங்காயம் | 50 | 54 | 71 | பென்னி பீன்ஸ் | 60 | 65 |
| 16 | பெ.வெங்காயம் | 48 | 52 | 72 | குடமிளகாய் | 42 | 46 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 34 | 73 | ஊட்டி அவரை | 150 | 160 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 80 | 90 | 71A | | | |
| 20 | தேங்காய் | 52 | 56 | | | | |
| 21 | மாங்காய் | 40 | 45 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 42 | 46 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 65 | 70 | 75 | எலுமிச்சை | 55 | 65 |
| 25 | சேப்பங்கிழங்கு | 45 | 50 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 60 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 38 | 42 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 40 | 46 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 35 | 40 | 80 | திராட்சை | 50 | 60 |
| 30 | புதினா | 6 | 8 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 22 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 20 | 22 | 83 | ஆரஞ்ச் | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 70 | 80 |
| 34 | அரைக்கீரை | 20 | 22 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 20 | 22 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 20 | 22 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 10 | 12 | 89 | | | |
| 39 | வல்லாரை | 10 | 12 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 30 | 34 | 91 | பூவன் | 35 | 40 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 40 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 26 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 20 | 24 | 96 | நேந்திரன் | 40 | 46 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 35 | 40 | 97 | செவ்வாழை | 65 | 70 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 45 | 48 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 55 | 60 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 35 | 40 | | | | |

# நவம்பர் 30-க்குள் பயிர் காப்பீடு செய்து கொள்ள விவசாயிகளுக்கு அழைப்பு

திருச்சி, நவ.25

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டாரத்தில் சம்பா நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்களது பயிரை, 2024-25 ஆம் ஆண்டுக்கான பிரதமரின் புதிய காப்பீடு திட்டத்தில் நவம்பர் 30-ம் தேதிக்குள் பயிர் காப்பீடு செய்து மகசூல் இழப்பிலிருந்து தங்களை காத்து கொள்ளலாம். இத்திட்டத்தில் குத்தகைகாரர்கள் உள்பட அனைத்து விவசாயிகளும் சேரலாம். பயிர் கடன் பெறுபவர்கள் மற்றும் பயிர் கடன் பெறாத விவசாயிகள் தங்கள் அருகாமையில் உள்ள பொது சேவை மையம் (Common Ser vice Center) அல்லது தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் (PACCS) அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ நெல் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு பிரிமியத் தொகை ரூ.566.12/- 30.11.24க்குள் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பதிவு செய்ய தேவையான ஆவணங்கள் : ஆதார் நகல், சிட்டா, அடங்கள், வங்கி சேமிப்பு கணக்கு புத்தக முன்பக்க நகல் (Bank Pass Book Xerox) ஆகிய ஆவணங்களை சமர்ப்பித்து பயிர் காப்பீடு திட்டத்தில் பயிர் காப்பீடு செய்து அதற்கான ரசீதினை பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு தங்கள் வட்டார வேளாண்மைத் துறை அலுவலர்களை அணுகி ஆலோசனை பெற்று பயன்பெறலாம் என்று மணப்பாறை வட்டார வேளாண்மை விரிவாக்க மைய உதவி இயக்குநர் மா.மேகனா தெரிவித்துள்ளார். மணப்பாறை வட்டார விவசாயிகள் பொதுசேவை மையங்களில் தங்களது ஆவணங்களை சமர்ப்பித்து பயிர் காப்பீடு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் நடப்பு ஆண்டில் மழை அதிகமாக பொழியும் என்ற வானிலை அறிவிப்பு பெறப்பட்டுள்ளதால் மணப்பாறை வட்டார விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி பயிர் காப்பீடு செய்து கொள்ளுமாறு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் மானியம் வழங்கும் விழா

கோயம்புத்தூர், நவ.25

மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் Rashtriya Krishi Vikas Yojana - Remunerative Approaches for Agriculture and Allied sectors Rejuvenation – Regional Agribusiness Incubators (RKVY-RAFTAAR-R-ABI) எனும் திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக இயக்குனரகம், தொழில்நுட்ப வணிக காப்பகத்தில் 2019-ல் இருந்து செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் இரண்டு பிரிவுகள் மூலம் மானியம் வழங்கப்படுகின்றது.



(i) புதிய வேளாண் தொழில் முனைவோர்களுக்கான (AOP) ரூ.5 இலட்சம் வரையிலான மானியத் தொகை

(ii) வேளாண் துளிர் நிறுவனங்களுக்கான (SAIP) ரூ.25 இலட்சம் வரையிலான மானியத் தொகை

மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் MoA & FW- RKVY - திட்டத்தின் கீழ் 2019 முதல் 2022 வரை ரூபாய் 8.10 கோடிமானியம் தொழில்நுட்ப வணிக காப்பகத்தின் 72 தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது. இதுவரை மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் (RKVY-RAFTAAR-R-ABI) கீழ் தேர்ந் தெடுக்கபட்ட புத்தொழில் முனைவோர்கள் மற்றும் உரிமை யாளர்களுக்கு நேற்று (25.11.24) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ஏ.கீதாலட்சுமி மானியங்களை வழங்கினார். வேளாண் துளிர் நிறுவனங்களுக்கான SAIP Cohort – II மற்றும் III ன்19 மானிய தாரர்களுக்கு ரூபாய்.1.05 கோடி வழங்கினார்.

அவர் தனது உரையில் இளம் பட்டதாரிகளை வேளாண்மை சார்ந்த தொழிலில் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் நிலையான மற்றும் இலாபகரமான விவசாய வணிகத்திற்காக புதிய தொழில்நுட்பங்களை புதுமைப்படுத்தவும் செயல்படுத் தவும், விவசாயம் சார்ந்த தொழில் முனைவோர்களை வழிகாட்டும் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கக இயக்குநர் முனைவர் S.சோமசுந்தரம், வரவேற்புரையாற்றினார் மற்றும் தொழில்நுட்ப வணிக காப்பக செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி A.V.ஞானசம்பந்தம் நன்றியுரை வழங்கினார். மேலும் இவ்விழாவில் பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற்ற தொழில் முனைவோர்கள் தங்கள் மானியத்தை வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தயாரிப்பு பொருட்களை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தி கொள்வர்.



# அங்கக நெல் சாகுபடியில் உரம் மற்றும் நீர் மேலாண்மை

## உர மேலாண்மை

- அடி உரமாக செறிவூட்டப்பட்ட தொழு உரம் ஒரு எக்டருக்கு 750 கிலோ என்ற அளவில் பயன்படுத்த வேண்டும் (தொழு உரத்தை 10 கிலோ அசோஸ்பைரில்லம், 10 கிலோ பாஸ்போ பாக்டீரியா மற்றும் 10 கிலோ ராக்பாஸ்பேட் என்ற அளவில் பயன்படுத்தி செறிவூட்ட வேண்டும்.

- மேலுரமாக மண்புழு உரத்தை 1 டன் / எக்டர் என்ற அளவினை நடவு செய்த 25 நாள் மற்றும் 45 நாட்களுக்கு பிறகு தூவ வேண்டும்.

- இலைவழி தெளிப்பானாக பஞ்சகவ்யா கரைசல் 3% என்ற வீதம் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 30 மில்லி பஞ்சகவ்யா) தூர் பிடிக்கும் பருவம் (25 நாட்கள்) மற்றும் கதிர் பிடிக்கும் பருவத்தில் (45 நாட்கள்) இலைவழியாக தெளிக்க வேண்டும்.




## நீர் மேலாண்மை

- ஆரம்ப கால 10 நாட்களில் மண் நனைப்பதற்கு மட்டுமே பாசனம் செய்ய வேண்டும்.

- பூங்கொத்து உருவாகும் வரை மண்ணில் மயிர்கோடு விரிசல் ஏற்பட்டால் அதிகபட்சமாக 2.5 செமீ ஆழத்திற்கு நீர்ப் பாசனம் செய்தல் வேண்டும்.

- அதன் பிறகு கட்டிய நீர் மறைந்த பின்னர் 5 செ.மீ ஆழம் வரை நீர் பாசனத்தை அதிகரித்தல் வேண்டும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி தெரிவித்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மக்காசோள சாகுபடியில் முக்கிய பிரச்சினையாக இருப்பது படைப்புழுவா? காட்டு பன்றியா? எப்படி ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்துவது?

தானியங்களின் அரசி என்று அழைக்கப்படுகின்ற மக்காசோளம் பயிர் இந்தியாவில் 17ஆம் நூற்றாண்டில் அறிமுகமானது. உலக அளவில் கோதுமை, நெல் பயிருக்கு அடுத்தபடியாக கோதுமை சாகுபடி செய்யப்படுகிறது. தமிழகத்தில் சாரசரியாக 3.5 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் இறவையாகவும் மானாவாரியாகவும் பயிரிடப்படுகிறது. முக்கியமாக தென்மாவட்ட கரிசல் நிலங்களில் அதிகமாக கடந்த சில ஆண்டுகளாக மானாவாரியாக பயிரிடப்படு கின்றன. மக்காசோளம் கால்நடை தீவனமாகவும் எத்தானல் தயாரிக்கப்படுவதாலும் இதனுடைய தேவை நாளுக்கு நாள் அதிகரிக்க தொடங்கி வருகிறது.

மக்காசோள சாகுபடியில் தற்போது இரண்டு முக்கிய பிரச் சனைகள் குறிப்பாக படைப்புழு தாக்குதல் மற்றும் வன விலங்கு களான அணில், முயல், மயில் தொந்தரவுடன் காட்டு பன்றிகளின் தாக்குதலும் அதிகமாக உள்ளது. இதனால் பல விவசாயிகள் மக்காசோள பயிருக்கு மாற்றாக எள், ஆமணக்கு போன்ற பயிர்வகைகளை சாகுபடி செய்ய முன்வந்துள்ளனர்.

இந்த எதிரிகளை எப்படி ஒருங்கிணைந்த முறையில் கட்டுப் படுத்துவது எப்படி என்பதை பார்ப்போம்.

**1) படைபுழு (FALL ARMY WARM)**

இது வெளிநாட்டு வரவின பூச்சி. இதன் தாயகம் அமெரிக்கா. 2016யில் இந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் சிவமுகா பகுதியில் தென்பட்டு படிப்படியாக தமிழகத்தில் தாக்குதல் அதிகமாகி வரு கிறது. மக்காசோள சாகுபடியில் விதைத்த 15வது நாளில் இருந்து கதிர் அறுவடை வரை தாக்குதல் இருக்கும். மக்காசோள சாகுபடி காலத்தில் இந்த படைப்புழு 3 தலைமுறை (GENERATION) எடுத்து தாக்கும். இளம்புழுக்கள் தான் அதிகமாக குருத்து பகுதியில் தாக்கும், நடுக்குருத்துகளை குடைந்து துளை போட்டும் உண்ணும். மண்ணில் கூட்டுபுழுக்கள் சில சமயங்களில் தங்கி விடும்.

**ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்திடுவது எப்படி?**

1) கோடை உழவு போடுதல்

2) ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு அடியுரமாக இடுதல்.

3) மக்காசோள விதைக்கு விதைநேர்த்தி ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் பேவரியா பேசியானா என்ற உயிர் பூச்சிக் கொல்லி மருந்து கலந்து விதைத்தல்.

4) ஊடுபயிராக தட்டைப்பயறு, உளுந்து சாகுபடி.

5) வரப்பு பயிராக நிலத்தைச் சுற்றி கம்பு, எள், ஆமணக்கு, சென்டுமல்லி சாகுபடி செய்தல்.

6)இனக்கவர்ச்சி பொறி ஏக்கருக்கு 5 எண்ணம் வைத்தல்.

7) பறவை தாங்கிகள் 5 எண்ணம்.

8) 20-25வது நாளில் அசாடிராக்டின் 1000ஊணஊணனி மருந்தை 10 லிட்டர் தண்ணீருக்கு 20 மி.லி கலக்க வேண்டும். அல்லது பேவரியா பேசியானா 50 கிராம் மருந்தை / 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

9) 40-45வது நாளில் எமடிக்டின் பென்சோவட் 4 கிராம்/ 10 லிட்டர் அல்லது கோராசின் 40 துளி ஏதாவது ஒன்றை தெளிக்க வேண்டும்.

10) பயிர் சுழற்சி முறையை கையாள வேண்டும்.

**வன விலங்குகள்**

மக்காசோளம், விதைப்பில் இருந்து அறுவடை வரை வன விலங்குகள் தாக்குதல் இருக்கும். இவற்றை கட்டுப்படுத்த ஒருங் கிணைந்த முறையினை கையாள வேண்டும். இந்திய வன விலங்கு சட்டம்1972யின் படி வின விலங்குகளை கொல்லுவதோ, வேட்டையாடுவதோ சட்ட படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

1) விதைத்த பயிரை மயில்கள் கிளறி சாப்பிடும். அதை தடுக்க அழுகிய முட்டைக்குள் தெளிக்க வேண்டும். இந்த துர் வாடைக்கு மயில்கள் நடமாட்டமே குறையும்.

2) முளைத்த பயிரை அணில்கள், முயல்கள், மான்கள் வெட்டி போடும். இவற்றை தடுக்க பசுஞ்சாணி கரைசலுடன் கோமியம் கலந்து வரப்பு ஓரங்களில் தெளிக்க வேண்டும். அதிகமாக தென்பட்டால் HERBELIVE REPELLANTயை பயன்படுத்தலாம்.

3) காட்டுபன்றியை விரட்டிட வேலி அமைக்க வேண்டும், சூரிய மின்சார வேலி கூட அமைக்கலாம்.

4) காட்டுபன்றிக்கு மோப்ப சக்தி அதிகமாக இருப்பதால் அது வரும் பாதையை கண்டறிந்து தலைமுடி (சலூன்கடை முடி) களை தூவி விடலாம். அது அதனை முகர்ந்து பார்க்கும்போது மூக்கில் குத்தும். இதனால் வந்த பாதையிலே ஓடி விடும்.

5) கலர்கலரன சேலைகள் துணிகளை நிலத்தை சுற்றி வேலியாக கட்டலாம்.

6) செயற்கையான சப்தம் எழுப்பும் கருவிகளை நிலத்தில் INSTAL பண்ணலாம். வரப்பு ஓரங்களில் அகழி காண் (பள்ளம்) வெட்டலாம். பன்றி நடமாடும் பாதையிலும் வெட்டலாம்.

7) விரிஞ்சிபுரம் இயற்கை பன்றி விரட்டியை பயன்படுத்தலாம். இரவு நேரங்களில் பட்டாசு வெடித்து பன்றிகளை விரட்டலாம்.

8) கிராமப்புற இளைஞர் ஒன்று சேர்ந்த கூட்டாக இரவு காவல் அறுவடை நேரங்களில் அமைத்து பன்றிகளை விரட்டலாம்.

மேற்சொன்ன முறைகளை கையாண்டாலே எளிதாக படைப் புழு மற்றும் வனவிலங்குகளின் தாக்குதலிருந்து எளிதாக தப்பிக்கலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# மணப்பாறை அருகே பண்ணப்பட்டி கிராமத்தில் நிலக்கடலை ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணைப்பள்ளி



திருச்சி, நவ.25

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை கீழ் 2024-25 ஆம் ஆண்டு பண்ணைப்பட்டி கிராமத்தில் நிலக்கடலை ஒருங்கிணைந்த பயிர் மேலண்மை குறித்து பண்ணைப்பள்ளி மணப்பாறை வேளாண்மை அலுவலர் தலைமையில் நடந்தது. வேளாண்மை அலுவலர் கண்ணன் நிலக்கடலை நுண்ணூட்டம் மற்றும் உயிர் உரங்கள் இடுவதின் பயன்கள் கூறித்து பேசினார். விதை சான்று அலுவலர் ரகுபதி மண்பரிசோதனை செய்வதின் அவசியம், தரமான இரகங்களை தேர்வு செய்தல் கூறித்து எடுத்து கூறினார்.




துணை வேளாண்மை அலுவலர் சிவக்குமார், இயந்திர முறையில் நிலக்கடலை நடவு மற்றும் விதை நேர்த்தி செய்யும் முறைகள் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் சரண்யா மணப்பாறை வேளாண் விரிவாக மையத்தில் உள்ள உயிர் உரங்கள் இருப்பு பற்றியும் தேவைப்படும் விவசாயிகள் பதிவு செய்ய கேட்டுக் கொண்டார். இறுதியில் அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் கலையரசன் அட்மா திட்ட செயல் பாடுகள், கண்டுணர்வு சுற்றுலா, செயல் விளக்கம், விவசாயிகள் பயிற்சி, பண்ணைப்பள்ளி பற்றி விளக்கி கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சத்திய சீலன் நன்றி உரை கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில் நுட்ப மேலாளர் பிரியங்கா செய்திருந்தார்.


Rithvik Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
CML-6400119610
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO 9001 CERTIFIED
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# வரும் 30க்குள் பயிர்க் காப்பீட்டு செய்யலாம்

புதுக்கோட்டை, நவ.25

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் பிரதம மந்திரி பயிர் காப்பீடு செய்ய நவம்பர் 30 ந்தேதி வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதாக வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தில் காப்பீடு செய்ய நவம்பர் 30 ந் தேதி வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே கந்தர்வகோட்டை வட்டார விவசாயிகள் சம்பா நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் சம்பா நெற்பயிருக்கு பயிர்க் காப்பீட்டு செய்து பயன் பெற வேண்டும் என வேளாண் உதவி இயக்குனர் அன்பரசன் தெரிவித்துள்ளார்.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இயற்கை இடர்பாடு களால் பாதிக்கப்படும் பயிர்களுக்காக விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு திட்டத்தின் மூலம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இப்பயிர் காப்பீட்டு திட்டத்தில் கடன் பெறும் விவசாயிகள் கடன் பெறாத விவசாயிகள் சாகுபடிதாரர்கள் குத்தகைதாரர் விவசாயிகள் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் விருப்பத்தின் பெயரில் பதிவு செய்து இத்திட்டத்தில் பயன் பெறலாம். பதிவு செய்வதற்கான கடைசி தேதி தற்போது வரும் 30ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த வசதியை பயன்படுத்தி தங்கள் பகுதி பொது சேவைமையம், தேசிய வங்கி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் காப்பீட்டுத் தொகையை ஒரு ஏக்கருக்கு ரூ.534 வீதம் செலுத்தலாம்.

பயிர் காப்பீடு செய்வதற்கு விவசாயிகளின் நில உரிமை ஆவணங்கள் அதாவது விதைப்பு செய்த சம்பா நெற்பயிருக்கு கிராம நிர்வாகஅலுவலர் வழங்கும் அட ங்கல், ஆதார் அட்டை நகல், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், முன்மொழிவு விண்ணப்பம் மற்றும் பதிவு விண்ணப்பம்ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

எனவே வட்டார விவசாயிகள் பிரதம மந்திரி பயிர் காப்பீடு செய்து இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்பை தவிர்க்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. இயற்கை இடர்பாடுகளால்

ஏற்படும் மகசூல் இழப்பை தவிர்க்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு கந்தர்வகோட்டை வட்டார வோண்மை உதவி இயக்குநர் (பொ) அன்பரசன் தெரிவித்துள்ளார்.

# டிஜிட்டல் பண்ணை பள்ளி (நெல்) விவசாயிகளின் வயலாய்வு

இராமநாதபுரம், நவ.25

இராமநாதபுரம் மாவட்டம் (கமுதக்குடி) மற்றும் சிவகங்கை மாவட்டம், மேல நெட்டூர் மற்றும் ஆலம்பச்சேரி, வயல் சேரி நெல் டிஜிட்டல் பண்ணை பள்ளி விவசாயிகளின் வயலாய்வு நிகழ்வு 23.11.24 அன்று ரிலையன்ஸ் பவுண்டேசன் சார்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்த கொண்ட மாவட்ட மேலாளர் ஸ்ரீ கிருபா கூறு கையில், கடந்த சில ஆண்டுகளாக நெல் சாகுபடிக்கான தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருவதுடன் இது போன்ற கள ஆய்வுகளும் செயல் விளக்கமும் நடத்தி விவசாயிகள் குறைந்த செலவில் அதிகமாக மகசூல் எடுப்பதற்கான தொழில்நுட்ப உதவி களை அலைபேசிவாயிலாகவும் வாட்சாப் குழுக்கள் வாயிலாகவும் குரல் வழி செய்தி மற்றும் கட்டணமில்லாத அலைபேசி எண் வாயி லாகவும் உடனுக்குடன் தகவலை விவசாயிகள் பெற்று பயன் படுத்திட கேட்டுக்கொண்டார். கால்நடைகளுக்கான மருத்துவ முகாம் விரைவில் நடைபெற ஏற்பாடு செய்யபட்டதாக தெரிவித்தார்.





இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பண்ணை பள்ளி விவசாயிகளின் நிலங் களை ஆய்வு செய்த வேளாண் வல்லுநர் சந்திரசேகரன் பேசுகையில், நாம் பாரம்பரிய மாக நெல் சாகுபடி செய்து வந்தாலும் தற்போதைய பருவ கால தட்ப வெப்ப நிலைக்கேற்ப சாகுபடி முறையில் புதிய புதிய தொழில்நுட்பங்களை அதுவும் குறைந்த செலவில் கூடுதலான மகசூல் பெற வழிவகை களையும் தற்போதை மழைக்காலங்களில் எப்படி பயிரை மேலாண்மை செய்வது குறித்து விவரித்தார்.

மேலும் அவர் கூறியதாவது.

1) நேரடி நெல் விதைப்பில் அதிகமான தண்ணீரை தேக்கி வைக்கக்கூடாது. அவ்வப்போது வடித்து விட வேண்டும். நெல் வயல் எப்போதும் காய்ச்சலும் பாய்ச்சாலுமாக இருக்க வேண்டும்.

2) அதிகமான தூர் கட்ட நல்ல காற்றோட்ட வசதி பயிருக்கு வேண்டும்.

3) மேலுரமாக இடும்போது ஏக்கருக்கு 22 கிலோ யூரியா + 18 கிலோ ஜிப்சம் + 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து முதல் நாள் இரவு வைத்திருந்து மறுநாள் காலை இதனுடன் 17 கிலோ பொட்டாஷ் கலந்து நெல் வயலில் இட வேண்டும்.

4) நெல் பயிரில் மஞ்சள் நிறமாக மாறி இருந்தால் 1 கிலோ சிங்சல்பேட் + 1/2 கிலோ யூரியா தண்ணீரில் கலந்து ஊறவைத்து பின் 100 லிட்டர் தண்ணீரை கலந்து இலைவழியாக தெளிப்பாக தெளிக்க வேண்டும்.

5) புகையான் குருத்து பூச்சி தாக்குதலை தடுக்க கார்டாப் ஹைடிரோ குளோரைடு குருணைகளை 5 கிலோ ஏக்கருக்கு மணல் கலந்து தூவி விடலாம்.

6) இலைகருகல் இலை புள்ளி போன்ற நோய்கள் தென்பட்டால் சூடாமானாஸ் ஏக்கருக்கு 1கிலோ 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். அனைத்து விவசாயிகளும் நெல் சாகுபடிக் கான பயிர் காப்பீட்டை பதிவு செய்ய வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

நெல்லில் சூடாமானஸ் தெளித்தல், உயிர் உரங்கள் தெளித்தல்.

மேலுரமாக இடுதல் மற்றும் பறவை தாங்கி வைத்தல் போன்ற வற்றிற்கான செயல் விளக்கம் (DEMENSTRATION) விவசாயி வயலில் செய்து காட்டப்பட்டது. பண்ணை பள்ளி விவசாயிகள் ஆர்வ மாக செயல் விளக்கங்களில் கலந்து கொண்டனர். அவ்வப்போது ஏற்படும் சந்தேகங்களுக்கு வல்லுநர் பதிலளித்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைஅந்த கிராம விவசாயிகளும் கள பணியாளர் லிபகா ராமும் சிறப்பாக செய்திருந்தனர்.

# பொன்னமராவதி வட்டார விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டியவை

சிவகங்கை, நவ.25

சிவகங்கை மாவட்டம், பொன்னமராவதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கா.ரஹ்மத் நிஷா பேகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்காக விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு திட்டத்தின் மூலம் இழப்பீட்டு தொகை வழங்கப் படுகிறது. இந்த பயிர் காப்பீட்டு திட்டத்தில் கடன் பெறும் விவசாயிகள், கடன் பெறாத விவசாயிகள், சாகுபடிதாரர்கள், குத்தகைதாரர் விவசாயிகள் பதிவு செய்து பயன் பெறலாம். பதிவு செய்வதற்கான காலம் 30ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.




இந்த வசதியை பயன்படுத்தி தங்கள் பகுதி பொது சேவை மையத்திலோ, தேசிய வங்கி கிளைகளிலோ, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ காப்பீட்டுத் தொகையை ஏக்கருக்கு ரூ.534 வீதம் செலுத்தலாம். பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளின் நில உரிமை ஆவணங்கள் அதாவது விதைப்பு செய்த சம்பா நெற்பயிருக்கு கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல், ஆதார் அடையாள அட்டை நகல், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், முன் மொழிவு விண்ணப்பம் மற்றும் பதிவு விண்ணப்பம் ஆகிய வற்றை சமர்ப்பிக்க வேண்டும். பொன்னமராவதி வட்டாரத்தில் சம்பா நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்து இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்பை தவிர்க்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# களர் உவர் மண்ணை கண்டறிதல் மற்றும் களர் உவர் மண்ணின் பௌதீக தன்மைகள்

களர் அல்லது உவர் நிலங்களை சரியாகக் கண்டறிதல் அவற்றை சீர்திருத்தி உபயோகிப்பதற்கான முக்கிய முன்னோடி யாகும். இந்நிலங்களை அவற்றின் பொதுவான தோற்றங் களைக் கொண்டும், பௌதீக இரசாயனத் தன்மைகளைக் கொண்டும் கண்டறியலாம்.

உவர் நிலங்களில், அநேக பயிர்ச் செடிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் அளவுக்கு கரையும் உப்புக்கள் இருக்கும்.

**இம்மண் வகைகளுக்கே உரிய சில தன்மைகளாவன :**

1. மேற்புறத்தில் வெள்ளை நிற உப்பு படிதல்,

2. ஈரப்பசை மற்றும் எண்ணெய் போன்ற தோற்றமளிக்கும் மேற்புறத்தில் தாவரமில்லாதிருத்தல்.

3. பயிர்களின் குறுகிய வளர்ச்சி

4. இலைகள் பல அளவுகளுடனும் ஆழ்ந்த நீலநிறத்துடனும் இருத்தல்

5. சில சமயங்களில் இலை நுனியும் ஓரங்களும் எரிந்து போவது போல் இருத்தல் ஆகியவையே ஆகும்.

ஒரே நயம் உள்ள சாதாரண அல்லது உவர் மண் வகைகளில் குறிப்பாக மணற்பாங்கான மற்றும் மித களித்தன்மை உள்ள வகைகளில் மழை நீரோ அல்லது பாசன நீரோ அதிக நேரம் தங்கி நிற்காது. ஆனால் களர் நிலமாக இருந்தால் நீர் நெடு நேரம் தங்கி நிற்கும்.

தவிர, மேலே தங்கி நிற்கும் நீர், சாதாரண மற்றும் உவர் நிலங்களில் தெளிவாகவும், களர் நிலங்களில் கருமையாக, சகதியுடனும் இருக்கும். வெயில் காலங்களில் உவர் மண்ணின் நிலப்பரப்பில் உப்புப் படிவங்கள் இருக்கும். களர் மண்ணின் மேற்பரப்பில் கரும்பழுப்பு அல்லது சாம்பல் நிறத்துடனும் கூடிய களிப்படிவங்கள் இருக்கும். இதற்கு காரணம் களர் நிலங்களில் உள்ள இலைமக்கு களர் உப்புக்களால் கரைக்கப்படுவதாகும்.

## உவர் நிலத்தைக் கண்டறிதல்

உவர் நில மண்ணின் மின் கடத்தும் திறன் ஒரு சென்டி மீட்டருக்கு 4 மில்லி மோஸ் என்ற அளவிலோ அதற்கு அதிக மாகவோ இருக்கும். களித்துகள்கள் மீது படிந்திருக்கும் அயனி களின் அளவில், சோடியம் 15 சதத்திற்கு குறைவாக இருக்கும். கரையும் உப்புக்களின் அளவு மண்ணிலுள்ள திரவத்தின் ஆஸ்மாட்டிக் அழுத்தத்தைக் கட்டுப்படுத்துகிறது.




அயனிகளின் அளவில் சோடியத்தின் பங்கு குறைவாக இருக்குமாதலால் களிமண் மீதுஒட்டிக் கொண்டிருக்கும் சோடியத்தின் அளவு குறைவாகவே இருக்கும்.

**களர் மண்ணைக் கண்டறிதல்**

உவரற்றகளர் மண் வகைகளின் முக்கிய இரசாயன குணம், களித்துகள்கள் மீது ஒட்டிக் கொண்டிருக்கும் அயனிகளில், சோடியம் 15 சதத்திற்கு அதிகமாக இருத்தலாகும். மண்ணில் உவர் நிலத்தைப் போல அதிக உப்பு இருக்காது. இதனால் மண்ணின் மின் கடத்தும் திறன் ஒரு சென்டிமீட்டருக்கு 4 மில்லி மோஸ் என்ற அளவைவிட குறைவாகவே இருக்கும். ஆனால் மண்ணின் காரஅமிலநிலை, 8.5க்கும் மேலேயும் சுமார் 10 வரையிலும் காணப்படும்.

மிகக் களரான மண்ணில் உள்ள அங்ககப் பொருள்கள் கரைந்து பரவலாகி, மண்ணின் மேற்பரப்பில் படிந்து விடு கின்றன. இதனால் மண்ணின் மேற்புறம் கருமையடைவதால் இம்மண் கருங்களர் என அழைக்கப்படும்.

இடமாற்றம் செய்யத்தக்க சோடியத்தின் அளவு, உவரற்ற களர் மண்ணின் பௌதீக இரசாயனத் தன்மைகளை மாற்றுகின்றது. சோடியத்தின் அளவு அதிகமாக அதிகமாக, மண் அதிக அளவு விரிவடைகிறது. மண்ணின் காரஅமில நிலை 10-ஐ அடையும். உவரற்ற களர் மண்ணில் உள்ள திரவத்தில் கரையும் உப்புக்கள் குறைவாக இருப்பினும் அதன் தன்மை சாதாரண மற்றும் உவர் மண்ணைவிட மாறுபட்டிருக்கும். இதிலுள்ள அயனிகள் குளோரைடு, சல்பேட் மற்றும் பைகார்பனேட்டாகவும் சிறிதளவு கார்பனேட்டாகவும் இருக்கும்.

**உவரோடு கூடிய களர் மண்ணைக் கண்டறிதல்**

இம்மண் வகைபெயருக்கேற்ப உவர் மற்றும் களர் ஆகிய இரு வகை குணத்தையும் கொண்டிருக்கும். மின் கடத்தும் திறன் ஒரு சென்டி மீட்டருக்கு 4 மில்லிமோஸ் என்ற அளவைவிட அதிக மாகவும், இடமாற்றம் செய்யத்தக்க சோடியத்தின் அளவு 15 சதத்திற்கு அதிகமாகவும், காரஅமில நிலை 8.5க்கும் குறை வாகவும் இருக்கும். இம்மண்ணில் கரையும் உப்புக்கள் அதிக மாக இருக்கும் வரை இதன் தோற்றமும் மற்ற குணங்களும் உவர் நிலத்தைப் போலவே இருக்கும். ஆனால் இந்த அதிக உப்புக்கள் கரைந்து வெளியேற்றப்படுமானால், இந்த மண் விரைவாக மாற்றத்தை அடைந்து உவரற்ற களர் மண்ணாக மாறி விடுகிறது. களர் மற்றும் உவர் வகைகளில் மின்கடத்தும் திறன், கார அமிலநிலை, இடமாற்றம் செய்யத் தக்க சோடியத்தின் அளவு ஆகியவை முக்கிய இரசாயனப் பரிசோதனைகளாகும்.

**உவர் மண்ணின் பௌதீகத் தன்மைகள்**

அதிகப்படியான உப்புக்கள் இருப்பதாலும் ஒட்டிக் கொண்டிருக்கும் சோடியத்தின் அளவு மிகக் குறைந்த அளவில் இருக்குமாதலாலும் உவர் மண் பொதுவாக நல்ல கட்டமைப்புடனும் கலகலப்பாகவும் இருக்கும். இதனால் இம்மண்ணின் நீர் கடத்தும் திறன் மற்ற சாதாரணமண்ணைப் போலவே இருக்கும். ஆகையால் தேவையன வடிகால் வசதி செய்யப்பட்டால், இவ்வுப்புகளை நல்ல பாசனநீர் கொண்டு நீக்கி விடலாம்.

ஒரு குறிப்பிட்ட உவர் நிலையில் மணற் பாங்கான நிலத்தைவிட களிமண் நிலத்தில் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்பு அதிகமாக இருக்கும். உவர் மண்ணின் புழுதித்தன்மை பிரச்சனைக்குரியதாக இருக்காது. அதிகமான உப்பின் காரணமாக உவர் மண்ணில் பயிருக்குக் கிடைக்கும் நீரின் அளவு குறைகிறது.

**களர் மண்ணின் பௌதீகத் தன்மைகள்**

மாற்றுச் சோடியத்தின் அளவு அதிகமாக இருப்பதால் களர் மண் சரியான கட்டமைப்பில்லாமல் விரிவடைந்து இருக்கும். இதனால், இம்மண்ணில் நீர் மற்றும் காற்று ஆகியவை உட்புகுவதோ, வெளி யேறுவதோ கடினமாகும். விரிவடைந்த நிலையிலுள்ள சோடியம் நிறைந்த களித்துகள்கள், மண்ணின் கீழ்ப்புறத்துக்கு உந்தப்பட்டு அங்கு ஒன்று சேர்ந்து மண் அடர்த்தியான கட்டமைப்பை அடை கிறது. இத்தகைய பௌதீக நிலை, நீர் உட்புகும் தன்மையைக் குறைத்து, பயிர்களின் வேர்களுக்குத் தேவையான நீர் கிடைக் காமல் செய்வதுடன் சரியான புழுதி செய்ய முடியாமலும் ஆகி விடுகிறது.

களர் மண்ணின் மொத்த அடர்த்தி அதிகமாகவும், காற்றோட்டத் திற்கு உதவும் துவாரங்கள் குறைவாகவும் இருக்கும். மண் ஈர மானால் மிகக் குழைந்தும், காய்ந்தால் மிக இறுகியும் காணப்படும்.

களர் மண்ணின் மேற்புறம் ஈரப்பதத்திலிருந்து காய்ந்து கொண்டுவரும் போது கடினமான படிவமாக மாறி விடுகிறது. இது விதையிலிருந்து முளைத்து வரும் இளஞ்செடியை சரியாக வளர விடாமல் செய்யும். களர் மண்ணின் மேற்புற மற்றும் உட்புற நீர் கடத்தும் திறன் மிகக் குறைவாகவே இருக்கும். அதைப் போலவே, பயிருக்குக் கிடைக்கக் கூடிய நீரை இருத்தி வைத்துக் கொள்ளக் கூடிய தன்மையும் குறைவாகவே இருக்கும்.

தகவல் : **தா. ஷெரின் ஜெனிட்டா ராஜம்மாள் மற்றும் மு.பாஸ்கர், மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், திருச்சிராப்பள்ளி.**


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com